**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C.C. No. 13/2018**

**Prosecution Witness : P.W. 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயக்குமார் | | : |
| Father / Husband Name | : வாசுதேவன் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/05/2025

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது நங்கநல்லூரில் வசித்து எஸ்எஸ்என் இன்ஜினியரிங் கல்லூரியில் பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2019 ம் தேதி காலை 3.15 மணியளவில் என் அப்பா சிருணியம் ஊர் அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பின்னால் ஆட்டோவில் வந்த நபர்கள் என் அப்பாவின் மீது மோதியதில் என் அப்பா கீழே விழுந்தார். ஆட்டோவில் இருந்து 3 நபர்கள் என் அப்பாவிடம் இருந்து செயின், மோதிரம், பணம் ரூ.1,500/- மற்றும் செல்போன் ஆகியவற்றை பிடிங்கி கொண்டு சென்றதாக என் சித்தப்பா கோவிந்தராஜ் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார். பின்பு நான் என் அப்பாவுடன் சேர்ந்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 முதல் 4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை அவரது வழக்கறிஞர் அவர்களது தரப்பில் குறுக்கு விசாரணை செய்தார்**

மேற்படி நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் தகவலின் பேரில் அறிந்து கொண்டேன் என்றால் சரிதான். நேரடியாக எனக்கு வழக்கு

விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான்.

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானார். அவரது வழக்கறிஞர் ஆஜராகவில்லை. அவரது தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**